சத்து குறைந்த தரமுள்ள நிலையிலே இருக்கின்ற காரணத்தால் அதை நல்ல தரமுள்ளதாக ஆக்குவதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டறியவும், அந்த இரும்பைப் பயன் படுத்துவதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும் மாநில அரசு தயங்காது.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருகிலே உள்ள கவுத்தி மற்றும் வேடியப்பன் குன்றுகளில் காணப்படும் இரும்புத் தாதுவை எடுத்து தனியாக ஒரு இரும்புத் தொழிற்சாலை துவங்காவிட்டா லும், சேலம் உருக்காலைத் திட்டத்துடனாவது இணைத்து அந்த இரும்பினை உபயோகப்படுத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சேலம் ஆலையையே, உருட்டாலையாக இருப்பதை உருக்காலை யாக மாற்ற வேண்டும் என்று இன்றைய தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி ஒருநிலை ஏற்படும் போது இந்தக் கேள்வியின் அடிப்படையிலே எழுந்துள்ள கருத்துக்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் படும்.

மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை.

*4105 திரு. கே. ரமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்கா மேலநீலிதநல்லூரில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, பசும்பொன் நேத்தாஜீ பாலிடெக்னிக் ஆகிய கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு கொடுக்கிற உதவித் தொகையை மாணவர்களுக்குக் கொடுக்காமல் ஏமாற்றி வருவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கல்லூரி பற்றி ஏதும் புகார் வரவில்லை.

(அ) பசும்பொன் நேத்தாஜீ பாலிடெக்னிக் மீது மேற் கூறிய புகார் தவிர மேலும் சில புகார்கள் பெறப்பட்டன.

(ஆ) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1989-90 ஆண் டிற்கான சேர்க்கையை நிறுத்த ஆணையிடப்பட்டது.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பல மாதங்களுக்கு முன்பே போடப்பட்டுள்ள கேள்வி. இந்தக் கல்லூரியிலே கடுமையான தாக்குதல் மாணவர்களுக்கு எதிராக நடக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உபகாரச் சம்பளம் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல. சுற்றிலும் கிராமங்கள் இல்லாத ஒரு தனியான இடத்திலே இருக்கிற அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் தாக்கப்பட்டு திருநெல்வேலி நகரத்திலே அவர்களுடைய போராட்டங்களே நடைபெற்று, அத்தனை விவரங்களையும் நானே எழுதி அமைச்சருக்குக் கடிதங்கள் கூடக் கொடுத்துள்ளேன். அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகத்தையே அரசு எடுத்து நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வளவு மோசமான நிர்வாகம் அங்கே நடைபெறுகிறது. அமைச்சர் அவர்களே சொன்னார்கள், அந்தப் பாலிடெக்னிக் சம்பந்தமாக இருக்கக்கூடிய விஷயம் பற்றி. ஆகவே, இந்த நிர்வாகத்தை மாற்றுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு, அது துறைக்குச் சென்று, துறையிலிருந்து எனக்குப் பதில் வந்து, அந்தப் பதிலிலே, நான் துறையினர் தருகிற ஆதாரபூர்வமான பதிலில் கையெழுத்திட்டு அதற்குப் பின்னர் இந்த அவையிலே வருவதற்குச் சில காலம் ஆகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்வதைப் போல, வேறு பிரச்சினைகள் இருக்குமானால் அது ஒரு வேளை இந்தக் கேள்வியை நாம் துறைக்கு அனுப்பிய அந்தக் காலகட்டத்தில் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. ஒரு விடை எழுதப்பட்டு வந்ததற்குப் பின்னர், அந்த விடையை இடைக் காலத்திலே பரிசீலனை செய்வதில்லை. எனவே வந்த விடைக்கு நான் கையொப்பம் இட்டுவிட்டால், அதற்குப் பின்னர், அந்த விடை அப்படியே சட்டமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அப்படியே காத்துக்கொண்டிருக்கிறது. எனவே திரு. ரமணி அவர்கள் வேறு பிரச்சினைகள் இருக்குமானால், தெரிவித்தால் கவனிக்க முயற்சிப்போம்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நிறைய பிரச்சினைகள் இருப்பதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து இருப்பதற்கு மகிழ்ச்சி. ஆனால் அந்த மாணவர்களுடைய கடுமையான கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு ஒரு உருப்படியான நடவடிக்கை வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வியின் சாரம். அங்கே அந்த உபகாரச் சம்பளம் கொடுப்பதில்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் படிக்கிற இடத்தில் பலவிதமான தாக்குதல்களும் நடைபெறுகின்றன. அந்தக் கல்லூரியினுடைய முதல்வராக இருக்கிறவரே அப்படிப்பட்ட நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறார். அதனால் ஒரு மேல்மட்ட, உயர்மட்ட அதிகாரியை வைத்து ஒரு

1990 மார்ச் 20]

விசாரணையை நடத்தி, முன்பு நடந்திருக்கும்படியான குறைபாடுகளும், மாணவர்களுக்கு எதிரான தாக்குதல்களும், சட்ட மீறல்களும் என்ன இருக்கின்றன என்ற உண்மையைத் தெரிந்து அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகத்தை அரசு மேற்கொள்ள, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்குமா என்பதையே நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

9—10 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியைப் பொறுத்தவரையில் அவர்கள் சொல்லுவது ஒருவேளை பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சியாக இருக்கக்கூடும். ஆனால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை, அவர்களுக்கு வழங்கப்பட்டு, பற்றுச் சீட்டும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குக் கல்லூரியிலிருந்து அனுப்பப் பட்டுள்ளது. மாணவர்கள் நிதி பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே நாமாக (குறுக்கீடு) அப்படி பரிசீலிக்க வேண்டுமானால் வேறு ஏதேனும் முறைகளைக் கையாண்டுதான் பரிசீலிக்க முடியுமே தவிர பற்றுச் சீட்டு மேல் அதிகாரிகளுக்கு வருகிறபோது அதில் கையொப்பம் இருக்கிற போது அதைத் தவறாக வைத்துக்கொண்டு ஒருவேளை கிரிமினல் கம்பிளைண்ட்டாக இருந்தால், யாராவது அதற்குத் தேவையான அளவுக்குப் புகார் கொடுத்தால் சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க முடியுமே தவிர மேல் அதிகாரிகள் ஒரு அதிகாரிக்கு மேல் உள்ள அதிகாரி என்ற நிலையில் முறைப்படி உள்ள ரசீதுகள் வருகிறபோது அதற்குமேல் தலையிடுவதற்கு அவர்கள் தயங்குவார்கள். மற்றும் ஒன்று அங்குள்ள பாலிடெக்னிக்மீது சொல்லப்பட்ட புகார்களைக் கோட்ட ஆட்சித் தலைவர் அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசியபோது ஒரு கால கட்டத்திற்குள் அந்தக் குறைகளை நிவர்த்திப்பதாக உறுதி அளித்துச் சென்றவர்கள் அதையும் நிறைவேற்றாமல் காலம் கடத்திய காரணத்தால், 1989-90 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கையை நிறுத்திட ஆணையிடப்பட்டிருக்கிறது. எனவே, ஓரளவுக்கு நடவடிக்கைகள் இருந்தாலும் மற்ற புகார்களையும் பரிசீலிக்கத்தான் வேண்டும். அதற்குத் தகுந்த சான்றுகள் கிடைக்கிறபோது பரிசீலிக்க முடியும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதைப்போன்ற கல்லூரிகளில் சலுகை பெறும் அதாவது உதவித் தொகை பெறும் மாணவர்களுக்கு மேனேஜ்மென்டால் சௌகரியம் குறைவாக இருப்பதால், ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல நேரடியாக அந்த உதவித் தொகையைச் சர்க்கார் அளித்து நிவாரணம் அளிக்க முடியுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி இப்போது எந்தக் கருத்துருவும் அரசிடத்தில் இல்லை. ஒரு வேளை தேவையானால் பரிசீலித்து அதற்குப் பின்னர் முடிவு எடுக்கலாம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய இந்த உதவித் தொகையை சில கல்லூரிகளில் அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் அந்தக் கல்லூரி பிரின்சிபால்கள் அல்லது தலைமை ஆகிரியர்கள் வட்டிக்கு வங்கியில் டெப்பாசிட் செய்து விடுகிறார்கள். அதை 7,8 மாதங்கள் அல்லது ஒரு வருடம் கழித்துக் கூட அதனுடைய வருமானத்தை அவர்கள் பயன் படுத்திக்கொண்டு மாணவர்களைச் சிரமப்படுத்துகிறார்கள். ஆகவே, அது சேங்ஷன் ஆன உடனேகல்லூரிகளுக்கு அல்லது பள்ளிகளுக்கு தகவல் போகும்போதே மாணவர்களுக்கும் ஒரு தகவல் அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக மாணவர்களுக்கு வழங்குவது என்பதில் சில சிக்கல்கள் நிச்சயமாக இருக்கின்றன. ஏனென்றால் மாணவர்கள் கல்லூரியினுடைய நிர்வாகத்திற்கு அல்லது அந்தத் தலைமை ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு நடக்கிற முறை இல்லாமல் போய்விடும். பணம் மட்டும் நேரடியாக அரசாங்கம் கொடுத்தால் ஆசிரியர்களை வீட்டுக்கு வந்து பாடம் நடத்தச் சொன்னாலும் சொல்லக் கூடும். ஆகவே பல சிக்கல்கள் ஏற்படும். சிக்கல் ஏற்படும் என்ற காரணத்தால், என்ன குறை, எப்படிப் பரிகாரம் காணலாம், என்ன முறையில் செய்யலாம் என்பதைத் தொடர்ந்து பல பிரச்சினைகளை ஆராய்வதைப் போல இதையும் ஆராய்வதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக் கிறது.

திரு. உரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற முறைகேடுகள் நடக்கிற பாலிடெக்னிக் போன்றவற்றில் அந்த நிர்வாகிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, மாணவர்கள் சேர்க்கையை நிறுத்தி வைப்பது என்பது அவற்றின் மூலம் பயன்பெறக்கூடிய மாணவர் களுக்குப் பாதிப்பாக இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவதற்கு வழிவகை செய்யப்படுமா? இப்போது இந்தப் பணங்கள் முறையாகப் போய்ச் சேருவதற்கு அந்த பாலிடெக்னிக் அல்லது நிர்வாகத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாக மாவட்டக் கல்வி அதிகாரியின் மூலமாக அதை வழங்குவதற்கும் மாவட்டக் கல்வி அதிகாரியிடத்திலே பெறக்கூடிய அளவுக்கு செக் மூலம் அந்தப் பண உதவியை வழங்குவதற்கும் ஏற்பாடு செய் தால் இந்தக் குறைகளைத் தவிர்க்க முடியும். அதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்

1990 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தனியார் நிர்வாகம் என்பது நூற்றுக்கு 90 இடங்களில் முறையாக இருந்தாலும் நூற்றுக்கு 10 இடங்களில்—விகிதாச்சார அளவில்தான் நான் சொல்லமுடியும்—சில குறைபாடுகளுக்கு ஆளாகிறது. ஆனால் குறைபாடுகளுக்கு ஆளானதற்குப் பின்னால் தொடர்ந்து அவர்களை—மாணவர்களைச் சேர்க்க அனுமதித்தால் அடுத்த ஆண்டு வகுப்பு உண்டு என்று சொன்னால் குறைபாட்டைக் களைய முடியாது. வேறு விதமான வழக்குகள் போட்டுக் கொண்டிருப்பதைவிட, அவர்கள் அந்தப் பள்ளியை நடத்துகிற அந்தத் தொடர்ச்சியைத் தடை செய்வதற்கு முயற்சிப்பதைத் தவிர சமூக நீதி கிடைப்பதற்கு வேறு வழி கிடையாது.

தபால் ஓட்டு.

*7584—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஓட்டுப் பெட்டிகளைக் காவல் செய்யவும், பாதுகாப்புக்கும் செல்லும் காவலர்களுக்குத் தபால் ஓட்டு கொடுக்கப்படுமா?

(9-15 மணி)

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைத் தேர்தலின்போது பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்படும் காவலர்கள் வாக்களிக்கத் தேர்தல் விதிகள் உரிமை வழங்கியுள்ளது. இத்தகைய காவலர்கள் பணிபுரியவேண்டிய இடம், அவர்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதியில் அமைந்தால், பணிச்சான்றிதழின் அடிப்படையில்—அவர்கள் இன்ன வேலைபார்க்கிறார்கள் என்ற சான்றிதழின் அடிப்படையில்—பணிபுரியும் அதே வாக்குச்சாவடியில் வாக்களிக்கலாம். எந்த இடத்திற்குப் பணிக்குச் செல்கிறார்களோ, அந்த வாக்கு சாவடியில் அவர்கள் பெற்றிருக்கிற பணிச் சான்றிதழைக் காட்டி வாக்களிக்கலாம், அதே தொகுதியாக இருப்பார்களேயானால், பணிபுரியும் இடம் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதிக்கு வெளியே அமைந்தால், அஞ்சல் வாக்குச் சீட்டின் மூலம் வாக்களிக்கலாம். பணிச் சான்றிதழைப் பெறவும், அஞ்சல் வாக்குச் சீட்டைப் பெறவும் குறிப்பிட்ட கால நேரத்திற்குள் உரிய தேர்தல் படிவத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் சரியாகவும் முழு விவரங்களையும் கொண்டு குறிப்பிட்ட காலநேரத்தில் கிடைத்தால், தேர்தல் நடத்தும் அதிகாரி பணிச் சான்றிதழையோ அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டையோ காவலருக்கு அனுப்பி வைப்பார். விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு, அஞ்சல் வாக்குச்